# பியர்ஸியின் குறியியல் சிந்தனை

ந.வாசு (R220704)
முனைவர்பட்டஆய்வாளர்
தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
திருவாரூர்.

பேரா.ச.இரவி ( நெறியாளர்)
தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
திருவாரூர்.

❖ **ஆய்வுச்சுருக்கம்:-**

குறியியல் கோட்பாட்டின் வரையறை, சொற்பொருள் விளக்கம் போன்றவை அளிக்கப்பட்டுள்ளது.இதற்கு குறியியல் சிந்தனையார்களின் கருத்துக்கள் துணையாக எடுத்து கையாளப்பட்டுள்ளது. அமெரிக்கத் தத்துவவியல் அறிஞரான பியர்ஸ் அவர்களின் குறியியல் சிந்தனை விளக்கப்பட்டுள்ளது. சங்க அக இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு பாடல்களில் ஒன்று சான்றாக எடுத்துகாட்டி பியர்ஸின் குறியியல் சிந்தனை விளக்கப்படுள்ளது.

➢ **முன்னுரை :**

இலக்கிய உலகில் மாற்றங்கள் நிகழ்வதும் நிகழ்ந்து கொண்டிருப்பதும் பொதுவான நிகழ்வுகளாகும். மாற்றங்களைத் தீர்மானிக்கும் காரணிகளாக காலம், இடம், சூழல் ஆகியவை உள்ளன. இருந்த போதிலும் கால வெள்ளத்தில் மூழ்காத சிந்தனையாக்கங்களும் கல்வெட்டுகளாக இங்குக் காட்சி தருவதையும் குறிப்பிட முடியும். அவ்வகையில் தொன்மையான தமிழ் மரபு சார்ந்த சங்கக் கவிதைகள் புதிய கருத்து விளக்கங்களுக்கு இன்றும் இடம் தருகின்றவையாகத் திகழ்கின்றன. மேலும் ஒரு பொருள் விளக்கம் தவிர்த்து, பன்முகப்பொருள் விளக்கத்திற்கான ஆய்வு அணுகுமுறைக் கோட்பாட்டோடும் தன்னை இணைத்துக் கொள்கின்றன. பன்முகப் பொருள் புலப்பாட்டிற்கு உரிய சிந்தனை முறையாக மேற்கிலிருந்து வந்த குறியியல்' என்ற அறிவியல் துறை, தமிழ்ச்சூழலில் இன்று இலக்கியங்களிலும் இலக்கிய ஆய்வுகளிலும் தொடர்புபடுத்திப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்ற ஒன்றாக உள்ளது. "தமிழ் மரபில் குறி' என்ற பொதுச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அதன் பொருண்மைகளாக அடையாளம், குறிப்பு, நிமித்தம், பகற்குறி, இரவுக்குறி முதலியவை

அமைகின்றன."(அப்துல் ரகுமான்,புதுக்கவிதையில் குறியீடு,ப.18.). பன்னிலை அர்த்தங்களுக்கான சிந்தனைக் கருத்துக்களைத் தாங்கியுள்ள குறியியல், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தமொழியியல் அறிஞர் பெர்னண்ட்டி சசூர், தத்துவவியல் அறிஞர் சார்லஸ் சாண்டர்ஸ் பியர்ஸ் ஆகியோர்களின் சிந்தனைகளில் இருந்து தோற்றம் பெற்றது.இவர்களில் சார்லஸ் சாண்டர்ஸ் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்

- **குறியியல்கலைச்சொல்விளக்கம்**

குறியியலுக்கு அடிப்படையாக விளங்குகின்ற குறியின் தன்மைகள், கருத்து விளக்கங்கள் பொதுக்கலைச் சொல்லாக்கம் ஆகியன இங்கு எடுத்துரைக்கப் படுகின்றன. குறியியலுக்கு அடிப்படை அலகாகக் குறி' அமைந்துள்ளது. எவ்வாறெனில் விலங்கியல், 'செல்' (Cell) என்ற அலகினையும், தாவரவியல் 'மார்ஃபீம்' (Morpheme) என்ற அலகினையும், அணுவியல் அணு' (Atom) என்ற அலகினையும் கொண்டிருப்பது போல், குறியியல் குறி' (Sign) என்ற அடிப்படை அலகினைக் கொண்டுள்ளது.(இரவி ,நம.வீ., குறியியலும் அரங்கக் குறியியலும்,ப.1). குறிக்கான (Sign) மூலச்சொல்லாக 'சிம்பலான்' (Symbolon) என்ற கிரேக்கச்சொல் குறிப்பிடப்படுகிறது. சிம்பலான் என்ற "இம்மூலச்சொல் குறி, அடையாளம், சின்னம் இலச்சினை முதலிய பொருண்மைகளை உள்ளடக்கியது. இச்சொல்லின் அடியாக உருவாக்கப்பட்ட 'சைன்' (Sign) என்னும் ஆங்கிலச் சொல்லானது ஒரு கருத்து அல்லது பொருண்மையைத் தெரிவிக்கும் குறி என்பது உட்படப் பல பொருண்மைகளைக் கொண்டதாக விளக்குகிறது என்பார் ஜே.ஏ. குட்டன்.(இளம்பரிதி .மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.5). இம்மூலச் சொல்லை அடியொற்றி ஆங்கிலத்தில் சீமியாடிக்ஸ்' (Semiotics), சீமியாலஜி (Semiology) என்ற சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன, இவைகள் இரண்டும் சைன் (Sign) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு சமமானவை. மேலும் "மூலச் சொல்லின் அடியாக உருவாக்கப்பட்ட இரு ஆங்கிலச் சொற்களும் குறிகளைப் பற்றிய கல்வி' என்ற ஒரே பொருண்மையையே கொண்டுள்ளன. (இளம்பரிதி. மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை, ப.5) அவற்றுள் "சசூரின் கருத்தினைப் பின்பற்றுகின்ற குறியியலாளர்கள் குறியியலை 'சீமியாலஜி" என்றும், அமெரிக்க அறிஞர்கள் சீமியாடிக்ஸ் என்றும் அழைக்கின்றனர். (இரவி,நம.வீ.,குறியியலும் அரங்கக்குறியியலும்,ப.1)ஆயின், "இவ்விருசொற்களும் அந்தந்த நாடுகளின் அரசியல், பண்பாட்டு, தத்துவப் பின்புலங்களைப் புலப்படுத்துவதாக நோயல் ஜோசப் இருதயராஜ் குறிப்பிடுகிறார்.(இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.5) அவ்வகையில் தமிழ் இலக்கியச் சூழலில் குறியியல் என்ற தமிழ்ச்சொல் "முதன் முதலில் தமிழவனது 'ஸ்ட்ரக்சுரலிசம்' என்ற நூலில் பயன் படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

(இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.5). என்று இளம்பரிதி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். சிமியோடிக்ஸ் (Semiotics) சிமியால்ஜி (Semiology) என்ற இவ்விரு ஆங்கிலச் சொற்களும் குறியியல் என்ற தமிழ் சொல்லுக்குச் சமமானவை. இருந்தபோதும் "தமிழ் ஆய்வுலகில் குறியியல் என்ற பெறுமொழி நிகரனின் மூலச்சொல்லாக சீமியாடிக்ஸ் என்ற சொல்லே பெரும்பாலோரால் ஆளப்படுகிறது. (இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.5) மேலும் தமிழில் 'சைன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கான பெறு மொழிநிகரனாக, குறி என்னும் சொல் ஆளப்படுகிறது. 'குறி', அடையாளம்', தெரிந்த எழுத்துக்குப் பதிலாக மேற்கொள்ளப்படும் தெரியவரா எழுத்து' என்பன உட்பட முப்பத்து நான்கு பொருண்மைகளைக் கொண்டதாய் இச்சொல் வழக்குப் பெறுகிறது. மேலும் நடைமுறைத் தமிழிலும் - பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்னும் இருவகை வழக்குகளிலும் - அடையாளம், இலக்கு, நோக்கம் என்றாற்போலப் பல பொருண்மைகளைக் கொண்டதாகவே இச்சொல் வழங்கப்படுகிறது. (இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.9). தமிழில் குறியீடு, குறியீட்டியல், குறிமப்பண்பாக்கம், குறிவயமாக்கம் ஆகிய சொற்கள் குறியியல் என்ற சொல்லின் பிற நிகரன்களாகும். இருந்தபோதிலும் இந்நிகரன்கள் அதனதன் சொற்தன்மைக்கு ஏற்பக்குறியின் செயல்பாடுகளை விளக்கப் பயன்படுகின்றன. அவ்வகையில் இவ்ஆய்வுக் கட்டுரையில் பெருவழக்குச் சொல்லானகுறியியல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. சிமியோன் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து உள்வாங்கப்பட்ட ‘சைன்' (Sign-குறி) என்ற சொல்லானது, உலகின் பல்வேறு மொழியில் கலைச் சொல்லாக்கப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்தந்த மரபினர்களின் சமூகம், மொழி, பண்பாடு மற்றும் இடச்சூழலுக்கு ஏற்ப தக்க வகையில் பொருண்மையைக் கொண்டுள்ளது. சான்றாக, ரோமன் காலத்து எழுத்தாளர்கள் 'சிமியோன்' என்ற சொல்லினை அவர்களின் மொழிப் பயன்பாட்டிலிருந்த ‘தெக்ரியோன்' (Tekmerion) என்ற சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் அதன் பொருண்மையாக ஆதாரம், கண்ணுக்குத் தெரியாத மறைந்திருக்கக்கூடிய அறிகுறி என்பதாகவும் கொண்டிருந்தனர். மேலும் நெருப்பின்றி புகைவதில்லை, கருமேகம் மழையின் குறி, உடற்சோர்வு நலமின்மையின் அறிகுறி என்பன குறிக்கான பிற பொருளாக எடுத்துக் காட்டுகின்றனர்.(இரவி,நம.வீ.,குறியியலும் அரங்கக்குறியியலும்,ப.2) மேலும் ரோமன் எழுத்தாளர்களைப் போலவே "ஸ்டாயிக்ஸ்' (Stoics) மற்றும் எபிகூரியன்ஸ் (Epicureans) மரபினர்சிமியோன் என்பதற்கு உற்று அறிவது, உண்மையை விளக்குவது, நேரடியாக ஒரு பொருளை அறிவதற்கும் மேலாக புலன் உணர்வினால் அறியப்படுவது என்றனர். (இரவி,நம.வீ.,குறியியலும் அரங்கக்குறியியலும்,ப.2). இவ்வாறாக, உலகின் அனைத்துச் சமூகங்களிலும் 'குறி' பற்றிய சிந்தனை இருந்துள்ளது. இருந்த போதிலும் கலைச் சொல்லாக்க முறைகளில் கிரேக்கச் சொல்லை

அடியொற்றியே அந்தந்தச்ச மூகங்களின் தன்மைகளுக்கு ஏற்பக்கலைச் சொல்லாக்கப் படுத்தியுள்ளனர். ஒவ்வொரு சமூக மரபிலும்குறியியலின் கலைச்சொல், பெயர் வேறுபாடு கொண்டு இருந்தாலும் குறி (Sign) என்ற சொல்லானது அனைத்துச் சமூகங்களிலும் மறைமுகப்பன்மைப் பொருள் உணர்த்துகின்ற சிந்தனையாக உள்ளது என்பதை அறிய இயலும். அதாவது பெயர்களில் (கலைச்சொல்லாக்கத்தில்) வேறுபாடுகள் இருந்தாலும், சிந்தனையில் ஒத்தத் தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதை இங்கு நிறுவலாம்.

- **குறியியல்விளக்கமும்வரையறைகளும்**

குறியியல் என்பது "சமூகம், வரலாறு, இயற்கை , மொழி, இலக்கியம், கலைகள் என்ற மனிதர் சார்ந்த அமைப்புகள் அனைத்தையும் குறியீட்டுத் தொகுதியாக ஒருவகை மொழியமைப்பாகக் கண்டு அவற்றின் செயல்பாடு , அர்த்த உருவாக்கம், மாற்றம் மற்றும் இணைவுகள் போன்றவற்றை விளக்கும் ஓர் அறிவுத்துறையாகும். இதனைக் குறிகள் பற்றிய விஞ்ஞானம் என்றும் விளக்குவர். (பிரேமானந்தன்,கோ.சிலப்பதிகாரம் மணிமேகலை;பெண்மையின் நாடகம்-குறியியல் ஆய்வு,முனைவர் பட்ட ஆய்வேடு,ப.24)' என பிரேமானந்தன் தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார். "சமுதாயத்தில் கருத்துப் புலப்படுத்தம் செய்ய மக்கள் பெரிதும் பயன்படுத்தும் குறிகளின் வாழ்வு பற்றிய அறிவியல் கல்வியே குறியியல்" ஆகும் என்ற சசூரின் கருத்தினை இளம்பரிதி தனது நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.(இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.5). மொழி என்பதும் சமூகம் என்பதும் ஒன்றே. எனவேதான் குறியியல், மொழிசார் சமூக ஆக்கங்களையும் மொழிசார் கலைகளையும் குறியீட்டுத் தொகுதிகளாக, ஒருவகை மொழியமைப்பாகக் கண்டு விளக்குகிறது. மேலும் "குறியியல், (Semiotics) என்பது குறிகள் பற்றித் தனியாகவும் குறி முறைமைகளின் கூட்டாகவும் ஆய்வு செய்யும் ஒரு துறையாகும். இது குறிகளின் பொருள் எவ்வாறு கடத்தப்படுகிறது (Transmit) என்றும் அவை எவ்வாறு விளங்கிக் கொள்ளப்படுகிறது என்பது பற்றிய ஆய்வையும்உ ள்ளடக்கும். மேலும் குறியியலைச் சமூகத்தில் பொருண்மையைப் புலப்படுத்துதல் பற்றிய அறிவியல் என வரையறுக்கலாம். (இரவி,நம.வீ.,குறியியலும் அரங்கக் குறியியலும்,ப.2) என்று ந.ம.வீ. இரவி குறிப்பிட்டுள்ளார். இன்னும் கூடுதலாக, "மனிதர்களுக்குள் கருத்துப் புலப்படுத்தம் செய்யப்படும் முறையை அதன் எல்லாப் பாங்குகளிலும் சூழல்களிலும் வகைகளிலு ம்வைத்துப் படித்தற்குரிய கல்விப்புலமே குறியியல்" (முத்துக்குமாரசாமி,எம்.டி,பிற்கால அமைப்பியலும் குறியியலும்,ப.1)என்று வரையறுக்கின்றனர். இவ்விளக்கங்களில் இருந்து குறிகள் சமூகத்தில் பொதிந்துள்ள அமைப்புக்கள் எல்லாவற்றினுடைய செயல்பாடு அர்த்த உருவாக்கம் பற்றி அறிவியல் அணுகுமுறையில் வெளிப்படுத்துகின்ற செயலைச் செய்கின்ற கல்வியாக விளங்குவதை அறிய முடிகிறது. அமெரிக்கத் தத்துவவியல் துறையைச் சேர்ந்த சார்லஸ்சாண்டாஸ்பியர்ஸ் (1839 - 1814) குறியியலுக்கான

விளக்கத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அதாவது "தர்க்கத்திற்கு இன்னொரு பெயர் சிமியோடிக்ஸ்; அதுதான் குறிகள் பற்றிய கோட்பாடு"(தமிழவன்,தமிழும் குறியியலும்,ப.2). மேலும் குறி என்பது ஒரு முறைமையில் விளங்குவதாகும். இவரின் கூற்றுப்படி தர்க்கம் என்பது ஒருமுக அர்த்தமளிக்கக்கூடிய, (Monosemic) நெகிழ்வற்ற, இறுக்கமான, இயக்கமற்ற தன்மைகளைக் கொண்டிருக்கும். சான்றாக HCL என்ற மொழிக்குறி ஹைட்ரஜன் குளோரைடு என்ற கருத்தைத் தவிரப் பிறிதொன்றைத் தருவதில்லை. அடுத்ததாக குறி தன்னை வெளிப்படுத்துவதோடு பிற ஒன்றையும் புலப்படுத்தும் தன்மை கொண்டது என்ற கருத்தில் இருந்து ஒரு பொருள் ஒரு பிரதிநிதித்துவத்தின் (Interpretant) மூலம் தன்னை அடையாளம் காட்டுகிறது"(தமிழவன்,தமிழும்குறியியலும்,ப.2). சான்றாக சாலைப் போக்குவரத்து விதிமுறைகள் படி, சிவப்பு நிற விளக்கு, நில் என்பதைக் குறிப்பிடுகிறது. எனவே பியர்ஸ் குறிப்பிட்ட 'குறி' (Sign) என்பது ஒரு பொருள் (Object) பற்றியும் ஒரு பிரதிநிதித்துவம் (Interpretant) பற்றியும் விளக்குகிறது. எனவே "ஒவ்வொரு குறியும் ஒரு மொழி அர்த்தத்தை உருவாக்குகிறது. இந்த மொழி அர்த்தம் மற்றொரு குறிப்பீட்டையே கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சொல்லும் மற்றொரு சொல்லால் பொருள் கொள்ளப்படுகிறது. மொழிப் பொருள் வழியாக மீண்டும் மொழியே சுட்டப்படுகிறது. இதனால் குறித்தல் செயல், முடிவற்ற தொடர் வினையாக (unlimitiedsemiocis) உள்ளது என்கிறார் பிரேமானந்தன் (பிரேமானந்தன்,கோ.சிலப்பதிகாரம் மணிமேகலை;பெண்மையின் நாடகம்-குறியியல் ஆய்வு,முனைவர் பட்ட ஆய்வேடு,ப.28). இக்கருத்துக்களில் இருந்து குறிகள் ஒருமுக அர்த்தங்களைத் தருவதோடு, சூழல் சார்ந்தும் பொருளை வெளிப்படுத்தும். அதேநேரத்தில் பன்முகப் பொருண்மையைப் புலப்படுத்துவதாகவும் உள்ளது என்பதை இங்கு அறியமுடிகிறது. உதாரணமாக, இலக்கிய மொழியில் பயின்று வருகின்ற மலர், வண்டு போன்ற மொழிக்குறிகள் பெண், ஆண், மென்மை, வன்மை, மகிழ்ச்சி, இன்பம் ஆகிய பன்முகப் பொருண்மைகளைத் தருவதாக உள்ளன. இவ்வகையில் குறியியல் நேரடியான மொழிக்குறியை விளக்குவதோடு மறைமுகப்பொருளையும் புலப்படுத்துகின்ற பணியைச் செய்கின்ற அறிவியலாக விளங்குவதையும் அறியலாம். குறி அலகுகள் பன்முக அர்த்தம் தருகின்றவையாக உள்ளன. பன்முக அர்த்தம் என்பது ஒற்றை அர்த்தத்தில் இருந்து வேறுபட்டது. அதாவது பன்முகங்களில் இருந்தும் அர்த்தத்தளத்தைக் கொண்டு நெகிழ்வுத் தன்மையில் இயங்கக்கூடியது ஆகும். இது "சமூகத் தொடர்பு முறையின் அடிப்படை அலகுகளான குறிகள், சங்கேதங்கள் அவற்றின் விளைவான அர்த்த உருவாக்கம், கருத்தியல் உருவாக்கம், புராணிகங்கள் போன்றவற்றை ஆராய்கிறது. (பூரணசந்திரன்,க.,அமைப்பியலும் பின்அமைப்பியலும்,ப.14) என்கிறார், க.பூரணச்சந்திரன். மேற்கூறப்பட்ட கருத்து விளக்கங்களில் இருந்து பின்வரும் கருத்துக்கள் புலப்படுவதை அறியலாம். கலை, இலக்கியம் முதலியவற்றைக் குறிகளின் தொகுதியாக அணுகும் ஆய்வு முறையாக இது விளங்குகிறது. அதாவது சமூகத்தில் கருத்துப் பரிமாற்றம்

என்பது அடிப்படையான ஒன்றாக உள்ளது. சொல்வழி (Verbal) சொல்லல்லாவழி (Non-verbal) ஆகிய இருவழிகளில் கருத்தாடல்கள் நடைபெறுகின்றன. இக்கருத்துப் பரிமாற்றங்களைக் குறி என்னும் அடிப்படை அலகின் ஒட்டுமொத்தக் கூறாகக் கொண்டு ஆராய்வது குறியியல் கோட்பாடு என்பதாக இங்கு வரையறை செய்துகொள்ள முடியும். இவ்வகையில் குறியியல் என்பதனைச் சமூகத்தின் பொருண்மையைப் புலப்படுத்துதல் பற்றிய அறிவியல் என வரையறுக்கலாம். .

- **பியர்ஸின்குறியியல்சிந்தனைகள்**

அமெரிக்க நாட்டினைச் சேர்ந்த சார்லஸ் சாண்டர் ஸ்பியர்ஸ் (1839 - 1914) அடிப்படையில் தத்துவவியல் துறையைச் சார்ந்தவர். சசூரைப் போலவே குறி என்னும் சிந்தனையில் ஆய்வுகளைச் செய்தவர். இவரது குறி ஆய்வு பயன் வழிவாத முறையில் அமைவது ஆகும். குறிக்கான பியர்ஸின் விளக்கமானது "தர்க்கத்திற்கு இன்னொரு பெயர்சிமியாடிக்ஸ், அதுதான் குறிகள் பற்றிய கோட்பாடு என்பதாகும்"(தமிழவன்,தமிழும்குறியியலும்,ப.36). சமூகம் குறித்தொகுதிகளால் ஆன அமைப்பு ஆகும், அவற்றிலிருந்தே அர்த்தங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த அமைப்பு முறை விதி ஒழுங்குகளாலும், மரபுகளாலும் கட்டமைக்கப்பட்ட ஒன்று. குறி பிற ஒன்றிற்காகத் தன்னை முன்நிறுத்துவதோடு, தன்மேல் இருந்தே பொருளை அவிழச் செய்கிறது. இதனைப் பியர்ஸின் கூற்றுவழி சொல்வதெனில், "ஒரு பொருள் யாரோ ஒருவருக்கு , ஏதோ ஒன்றாக, ஏதோ ஒரு முறைமையில் விளங்குவதாகும்". (தமிழவன்,தமிழும் குறியியலும்,ப.2). இக்கருத்து விளக்கம் குறியின் தன்மையைப் புலப்படுத்துவதை உணரலாம். பின்வருகின்ற விளக்கம் மேற்கூறப்பட்ட கருத்தை அறிந்துகொள்ள ஏதுவாக அமையும். ஒரு குறி என்பது ஏதோ ஒரு பொருளைக் குறிக்க ஏதேனும் ஒரு தகுதியில் நிற்பது; ஆனால் தன்னைப் பற்றிக் குறிப்பிட நிற்கவில்லை ; எனவேதான் குறியை Representer" (பிரதிநிதியானது) என்று பியர்ஸ் குறிப்பிடுகின்றார்.(தமிழவன்,தமிழும் குறியியலும்,ப.3). அடுத்து யாரையேனும் சேரும்போது அவர்கள் மனதில் குறிக்குச் சமமான அல்லது அதைவிடக் கூடுதலான அடையாளத்தைத் தோற்றுவிக்கக் கூடியது. இந்த அடையாளம் எல்லா வடிவிலும் இல்லை.ஒரு கருத்து என்ற வகையிலேயே குறிக்கிறது. மேலும் சூழல், அனுபவத்தோடு தொடர்புடையதாக இருக்கும். குறியானது, பருப்பொருளின் கருத்தை மட்டும் புலப்படுத்தும் பண்பினைக் கொண்டது. அதாவது குறி தான் குறிக்கும் பருப்பொருளைப் பற்றிய கருத்தை மட்டும் தான் புலப்படுத்துமே தவிர அந்தப் பொருளையே புலன் உணர்வுக்கு உட்படுத்தாது". (தமிழவன்,தமிழும் குறியியலும்,ப.4).உதாரணமாக பச்சை நிறமானது, போக்குவரத்து விதியில் செல்' என்ற பொருளை மட்டுமே புலப்படுத்தும், மாறாகப் பச்சை நிறத்தின் பண்புகளோ, தன்மைகளோ அவ்விடத்தில் புலப்படாது.

இதன்வாயிலாக, குறி பிறிதொன்றினைக் குறிப்பிடுவதற்காக வருகின்ற ஒன்று என்ற கருத்தை இங்குத்தெளிவுப் படுத்திக்கொள்ளலாம்.

## ➢ குறியும் – மனக்கருத்தும்

"குறி என்பது வேறாரு பொருளுக்காகத் தான் ஏதேனும் ஒரு தகுதியில் நிற்பது.இது யாரையேனும் சேரும்போது அவர்கள் மனதில் ஒரு சமமான அடையாளத்தை உருவாக்குகிறது. இந்த அடையாளம் தான் மனக்கருத்து (Interpretant). எந்த ஒன்றின்சார்பாகக் குறி நிற்கிறதோ அது பொருள் (Object) எனப்படும்".(பூரணசந்திரன்,க., அமைப்பியலும் பின்அமைப்பியலும்,ப.17-18) இக்கூற்றில் குறி என்பது பொருள் உருவாக்கத்தின் மீது முழுக்கவனம் செலுத்துவதை உணரலாம். அதாவது குறி பிறபொருளுக்குப் பிரதிநிதியாக நிற்கும் பொழுது, குறிப்பான், குறிப்பீடு இயல்பாகவே உருவாகிவிடுகின்றன. குறிப்பான் என்பது நாம் வெளிப்படையாகக் காணும் வடிவம், தாளின் மேலுள்ள எழுத்துக்கள், காற்றில் வரும் ஒலிகள் யாவும் குறிப்பான்களே. குறிப்பீடு என்பது குறியின் மனக்கருத்து அல்லது பிம்பம்"(பூரணசந்திரன்,க.,அமைப்பியலும் பின்அமைப்பியலும்,ப.19) என்று விளக்குவார் க. பூரணச்சந்திரன்.எனவேதான் ஒரே கலாச்சாரத்தைச் சேர்ந்த ஒரே மொழியைப் பேசுகின்ற உறுப்பினர்கள் யாவரும் பெரும்பாலும் ஒரே மாதிரியான குறிப்பீடுகளைக் (மனக் கருத்துக்களை) கொண்டிருப்பதனால் செய்திப்பரிமாற்றம் சாத்தியமாகிறது. குறிப்பானும் குறிப்பீடும் ''குறித்தல்'' செயல்வாயிலாகத் தொடர்புறுகின்றன. மேலும் குறித்தல் என்பது ஒவ்வொருவரும் அவரவர் அளவில் உலகிற்கு அர்த்தம் கொடுக்கும் தன்மை அல்லது புரிந்துகொள்ளும் தன்மையே ஆகும். குறிப்பான்கள் மொழிக்கு மொழிமாறுவன என்பது அனைவருக்கும் எளிதில் புரியக்கூடியது. குறிப்பீடுகளும் ஏறத்தாழ சமமானவையேயன்றி முற்றிலும் சமமானவை அல்ல. ஒரே மொழிக்குள் காணப்படும் குறிப்பீடுகளுக்கும் இது பொருந்தும். மேற்கூறப்பட்ட கருத்து விளக்கங்களில் குறிப்பான்கள் மூலம் புலப்படுகின்ற கருத்து, மனம் சார்ந்து அமைவதை அறிய முடிகிறது.

## ➢ பியர்ஸின் குறி வகைகள்

குறி, குறிப்பீடு பற்றி விளக்கமளித்த பியர்ஸ், பொருளுருவாக்கத்திற்கு அடிப்படைக் காரணியாக உள்ள குறி பல்வகைகளாக நின்று பொருளைப்புலப்படச் செய்கிறது என்கிறார். அவ்வகையில் "பொருண்மை புலப்படுத்தலின் அடிப்படையில் குறிகளை இருபத்தேழுவகையினவாகப் பகுக்கிறார்; பின்னர் அவற்றை ஒன்பது வகையினவாகச் சுருக்குகிறார். அவ்வாறு பகுத்த அவற்றைப் படிப்படியாகச் சுருக்கி இறுதியாக மூன்றுவகைகளாக மட்டும் குறியியலுக்கான முக்கியப் பங்களிப்பாகக்கருதித் தேர்ந்தெடுத்துவிளக்கியுள்ளார். அவை உருவக்குறி (Iconic Sign), சுட்டுக்குறி (Index Sign), குறியீடு (Symbol Sign)

என்பவைகளாகும்”.(இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.21) இம்மூன்றும் பொருள் புலப்படுத்தம் சார்ந்த அனைத்துத் தளங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மொழிசார், மொழிசாராப் பொருளுருவாக்க வடிவங்கள் அனைத்திற்குமான ஒரு குறியியல் மாதிரியை இதன்மூலம் பியர்ஸ் உருவாக்கித் தந்திருக்கிறார்.

தமிழ்ச்சூழலில் இம்மூன்று குறிவகைச் சொற்களும் பல்விதமாகக் கலைச் சொல்லாக்கம் பெற்றுள்ளன. இருந்த போதும் இங்கு பெரும்பான்மையாக வழக்கில் உள்ள கலைச்சொற்கள் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. அவைஉருவக்குறி, சுட்டுக்குறி, குறியீட்டுக்குறி என்பவையாம். இக்கலைச் சொற்களே பெருவழக்கு நிகரன்களாக உள்ளதால் இவ்வாய்வுக் கட்டுரையிலும் இக்கலைச் சொல்நிகரன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- **உருவக்குறி**

இரு பொருள்களுக்கிடையிலான ஒப்புமைத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது உருவக்குறி ஆகும். அதாவது "ஒரு குறிப்பானுக்கும் அதன் குறிப்பீட்டுக்கும் இடையிலான உருவ ஒப்புமையின் அடிப்படையில் அறியப்படுவது" என்கிறார், கெர்எலம் (இரவி,நம.வீ., குறியியலும் அரங்கக் குறியியலும்,ப.12). உருவக்குறியானது ஒத்த உருவத்தன்மையால் ஒன்றினை மட்டும் குறிப்பது ஆகும். உதாரணமாக கணினி (Computer) என்பதைக் குறிக்க கணினியின் சிறுவரைபடத்தைப் பயன்படுத்துவது. இவ்வரைபடம் கணினியை உணர்த்திவிடும். எனவே தான் உருவக்குறியினை ‘நகல்கள்' என்று குறிப்பிடுவர். இன்னும் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் தெளிவுபடுத்தலாம். அவை புகைப்படங்கள், சுவர் விளம்பரங்கள், திரைப்படங்கள், ஆண், பெண் உருவங்கள், கோயிற்சிற்பங்கள், செயல்முறைக் கற்றலுக்குப் பயன்படும் உபகரணங்கள் இவை யாவும் உருவக்குறிகளாக உள்ளதை இங்கு அறியலாம். மேலும் இவை யாவும் உண்மையான ஓர் மூலத்தின் பிரதிபலிப்புகள் மட்டுமே; உண்மையான மூலப்பொருட்களின் முழுமையான வெளிப்பாடுகள் அல்ல. பிரதிபலிப்பின் வாயிலாக மூலப்பொருளின் பௌதிக அமைப்பினை மட்டும் இவை உணர்த்துகின்றன. பொதுவாக மொழிசார்கலை, மொழிசாராக்கலைகளில் உருவக்குறிகள் இடம்பெறுகின்றன. மொழிசாராக் கலைகள் வழியாக வெளிப்படும் உருவக்குறிகளுக்கு வருணனைகள் தேவையில்லை. அதுநேரடியாகவே அர்த்தங்களைப் புலப்படுத்திவிடும். ஆனால் மொழிசார்க்கலை வடிவான இலக்கியங்களில் ஓர் உருவத்தைப்பதிவுப் படுத்தும்போது வருணனை அவசியமான ஒன்றாகி விடுகின்றது.

- **சுட்டுக்குறி**

அரங்கக்குறியியலார் கெர்எலம் கருத்துப்படி, "சுட்டுக்குறி என்பது ஒன்றின் வழித்தொடர்ச்சியாய் ஒரு கருத்தினைப் பெறுவதாகும். (இரவி,நம.வீ.,குறியியலும் அரங்கக்குறியியலும்,ப.13)அதாவது சுட்டுக் குறிப்பான் தன்னைக் காட்டாமல் தன் வாயிலாக உருவாகும் ஒரு விளைவின் ஒன்றினைக் குறிப்பது சுட்டுக்குறி ஆகும். சான்றாக, புகை வந்தால் நெருப்பிருக்கும் என்ற தர்க்கம், வெகுதொலைவில் எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பை நம்மால் அறிய முடியாது. ஆனால், நெருப்பின் வழியாக உருவாகின்ற புகையின் மூலமாகவே நெருப்பு இருப்பதை அறிய முடியும். 'புகை' என்ற குறிப்பான் சுட்டாகச் செயல்பட்டு நெருப்பு இருப்பதை அடையாளப்படுத்துகிறது. பொதுவாக குறியீட்டுக்குறி போல் சுட்டுக்குறி பன்முக அர்த்தங்களைக் கொடுப்பதில்லை. மாறாக "ஒருகருத்தினை உணர்த்துவதற்கான வழிகளாகச்செயல் படுகின்றனவே தவிர குறிப்பிடக்கூடிய கருத்தாக இருப்பதில்லை . (இரவி,நம.வீ., குறியியலும் அரங்கக்குறியியலும்,ப.13) என்கின்றார், ந.ம.வீ. இரவி. அவ்வகையில் சொற்கள், அடையாளங்கள், நிறங்கள், அளவீடுகள் போன்றவை சுட்டுக்குறிகளேயாகும். பின்வருகின்ற உதாரணங்களின் வாயிலாகச் சுட்டுக்குறி குறித்துத் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். சான்றாக, பேருந்துகள், திரையரங்குகள் இன்னும் பிறவகையானவற்றில் ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், ஏறும் வழி, இறங்கும் வழி, புகைபிடிக்காதீர் போன்றசொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும். இச்சொற்கள் அவரவர்களுக்குரிய இடத்தையும், செய்யவேண்டியவை, கூடாதவை என்பன போன்ற கருத்தினைச் சுட்டுவதாக உள்ளதை அறியமுடியும். அவ்வகையில் இச்சொற்கள் எல்லாமே சுட்டுச்சொற்களே என்பதை இங்கு விளங்கிக்கொள்ளமுடியும். மேலும் இச்சொற்கள் ஒரு கருத்தை மட்டுமே புலப்படுத்தும் பண்பைப் பெற்றுள்ளதனையும் உணரமுடியும். சொற்கள் பயன்பாடுகளோடு அம்புக்குறிகளைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்த சுட்டமுடியும். ஓர் ஊரையோ இடத்தையோ குறிப்பிடுவதற்கு அம்புக்குறி பயன்படுத்தப்படும். அம்புக்குறியான குறிப்பான் தன்னைக் காட்டாமல், தன்வாயிலாக ஊருக்குச் செல்கின்ற வழி இது என்ற கருத்தைப் புலப்படுத்துவதன் மூலம் இது சுட்டுக் குறியாகிறது.

- **குறியீட்டுக்குறி**

குறியீட்டுக்குறியை "ஒரு குறிப்பீடுவேறாரு குறிப்பீட்டுக்குப் பதிலாக நிற்பது"(இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.28) என்று ஹாக்ஸ் குறிப்பிடுகிறார். குறியீடு என்பது "சொல்லின் அர்த்தத்தைத் தாண்டிய ஓரர்த்தம்" என்கிறார், நுஃமான். இந்த அர்த்தம் மரபின் துணையுடன் புரிந்து கொள்ளப்படுவது. அதாவது சொல்லின் அர்த்தமானது மேல்நிலையில் புலப்படுவது, சொல்லைத் தாண்டிய அர்த்தம் ஆழ்நிலையில் புலப்படுவது, இந்த ஆழ்நிலையில் கிடைக்கின்ற அர்த்தமே குறியீடு ஆகும். இருந்தபோதும் இவ்விரு அர்த்தங்களும் சமூகமரபு சார்ந்தவையாகும்.

எடுத்துக்காட்டாக, 'குறிஞ்சிமலர்' என்ற சொல்லைப் படித்தாலோ கேட்டாலோ குறிஞ்சி மலரின் நிறம், தன்மை ஆகியன மனக்கண் முன் தோன்றி மறையும். இத்தகைய மனக்கருத்துக்கள் படித்தவுடனோ, கேட்டவுடனோ மனதில் எழுகின்றவையாகும். இக்கருத்துக்கள் சொல்லின் மேல்நிலை அமைப்பிலிருந்து பெறப்படுகின்றவையாகும். இதற்கு மாறாக, மேல்நிலை அமைப்பு வெளிப்படுத்திய அர்த்தங்களைத் தாண்டி ஆழ்நிலை அர்த்தங்களைத் தருவது குறியீடாகும். அதாவது குறிஞ்சிஎன்ற சொல் புணர்ச்சி என்ற அகப்பொருளைத் தருகிறது. மேலும் குறிஞ்சிமலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூப்பதுபோலப் பெண் பன்னிரண்டு ஆண்டில் பூப்பெய்தி மணவாழ்க்கைக்கு உரியவளாகிறாள். ஒரு பெண் தனது பன்னிரண்டாவது வயதில்தான் காதலுக்கு அல்லது மணவாழ்க்கைக்குத் தகுதி பெற்றவளாகிறாள் போன்ற ஆழ்நிலைக் கருத்துக்களையும் குறிஞ்சிமலர் என்ற சொல் வெளிப்படுத்துகிறது. குறியீடுசமூக மரபால் அமைவது என்ற கருத்திற்குக் கீழ்வரும் தொன்மை சான்ற இலக்கியவரிகள் வழியாக நிறுவலாம். இளங்கோவடிகள் கண்ணகியை "ஈரறாண்டு அகவையவள்" (சிலம்பு.மங்கல வாழ்த்து, பாடல் எண்2,) என்று குறிப்பிடுவதைக் காணலாம். இக்கூற்று மூலம் பழந்தமிழர் மரபுப் படி பன்னிரண்டு வயது வந்துவிட்டால் பெண் மணவாழ்விற்குத் தயாராகிவிட்டாள் என்ற கருத்து மரபுடையவர்கள் தமிழர்கள்; இவ்வழக்கு மரபுகள் இயற்கைப் பொருள்களின் (கருப்பொருள்) தன்மைக்கு ஒப்பமதிப்பிட்டு, நனிநாகரிகமாகத் தொடர்பாடலைச் செய்கின்ற இலக்கியங்களைப் படைப்பது தமிழரின் இலக்கியமரபாகும். அவ்வகையில் ஆழ்நிலை அர்த்தங்களைக் கட்டமைப்பது சமூகமரபு சார்ந்தது என்பதை இங்கு அறிய முடிகிறது. சமூகமரபிலிருந்து உருவாகின்ற (மொழி) சொல்லின் மேல்நிலை, ஆழ்நிலை அர்த்தங்கள் இடுகுறிப்பண்பு கொண்டவையாகும். அதாவது "குறியீட்டுக்குறியில் குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்கும் இடையிலான உறவு இடுகுறித் தன்மை வாய்ந்தது" (இளம்பரிதி.மொ.,குறியியல் ஒரு சங்கப்பார்வை,ப.28) என்று ஹாக்ஸ் குறிப்பிடுகின்றார். மேலும் சமூகம் கட்டமைக்கின்ற ஒரு குறிப்பானிற்கான, குறியீட்டுப் பொருள் காலப்போக்கில் மரபாகவும், வழக்காறாகவும் மாற்றம் பெற்று நிலைத்தத் தன்மையைப் பெற்றுவிடுகின்றது. வழக்காறாக மாற்றம் அடைந்த குறிப்பான், மரபாகப் (காலந்தோறும்) பயன்படுத்தப்பட்டு, குறியீடாக ஒரு குறித்த விதிப்படிப் பன்முகப் பொருளைத் தருகிறது. உலகில் இடம் பற்றுள்ள ஒவ்வொரு குறியீடுகளும் வெவ்வேறானவையாகும். ஏனெனில் ஒரு நாட்டின் மொழி, அர்த்தங்கள், பண்பாடு, பழக்கங்கள், வாழ்வியற் கூறுகள் ஆகியன மற்றாரு நாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மைகளைக் கொண்டிருப்பவை. பல கருத்தாக்கங்கள் அவ்வவ்கலாச்சாரத்திற்கே உரியவை. சான்றாக, தமிழின் கற்பும், ஆங்கில ஜாஸ்ட்டியும் (Chastity) அகராதியில் சமமான அர்த்தம் பெற்றிருந்ததாலும் ஒன்றல்ல; முக்கியமான அம்சங்கள் பலவற்றில் வேறுபடுபவை. இவ்வாறே 'தர்மம்' என்ற சொல்லுக்கு நாம் தரும் பொருள் வேறு, வடநாட்டவர் தரும் பொருள் வேறு. சுருக்கமாகக் கூறினால் குறியீடுகள் என்பன

"யதார்த்தத்தை நாம் பல பகுதிகளாக வகுத்து, அவற்றைச் செயற்கையாக வகைப்படுத்தி உலகைப் புரிந்துகொள்ள உதவும் மனக்கருத்துக்களே. இவ்வாறு வகைப்படுத்தல்தான் ஒவ்வொரு கலாச்சாரத்தையும் பிரிக்கிறது. அதனால்தான் மொழிக்குமொழி பிரித்தல் வகைகள் வித்தியாசப்படுகின்றன", (பூரணசந்திரன்,க.,அமைப்பியலும் பின்அமைப்பியலும்,ப.20) என்கிறார் க. பூரணச்சந்திரன்.

தமிழ் இலக்கியமரபில் குறியீட்டுக்குறியின் பயன்பாட்டு மரபு தொல்காப்பியத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளது. தொல்காப்பியர் அகத்திணையியலுள் குறிப்பிடும் அடையாளப் பூக்கள் அனைத்துமே குறியீட்டுக்குறிகள் தாம். சான்றாக, முல்லை என்னும் குறிப்பான் 'இருத்தல்' என்ற அகப்பொருளையும், மலரின் தூய வெண்மைத் தன்மை இல்லறமாற்றியிருக்கும் தலைவியின் தூய்மையான கற்பினையும் மேன்மையாகக் காட்டுவதாகும். சங்கத் திணை இலக்கியப் பனுவல்களில் குறியீட்டுக் கவிதைப் படைக்கப்படுவதன் காரணம் என்னவெனில், சொல்லவந்த கருத்தால் ஆசிரியனுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடாது. பிரதியை வாசிக்கின்ற வாசகனுக்கு, பிரமிப்பையும், தேடுதல் வேட்கையையும் அதிகரிக்கச் செய்வது, நனிநாகரிகத்தோடு கருத்துக்கள் குறியீடுகளாகக் கட்டமைக்கப்படும் பொழுது, அனைவருக்குமான பிரதியாக உருவாகிவிடுகின்றதோடு சமூகத்தின் நலன் காப்பதாகவும் அமைகிறது. அவ்வகையில் சங்கத்திணை இலக்கியப் பிரதியில் ஏராளமான குறியீட்டுக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இக்குறியீட்டுக் கோட்பாடு, தமிழ் இலக்கியமரபில் உள்ளுறை, இறைச்சிக் கோட்பாடுகளாக மிளிர்வதைக் காணலாம். குறிப்புப்பாருள்களையும் குறிப்புப்பொருள்களையும் குறியீட்டுக்குறிகளையும் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்.

**கோழிலைவாழைக்கோள்முதிர்பெருங்குலை**

**ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த்தடுத்த**

**சாரற்பலவின்சுளையோடு, ஊழ்படு**

**பாறை நெடுஞ்சுனை, விளைந்ததேறல்**

**அறியாது உண்ட கடுவன் அயலாது**

**கறிவளர் சாந்தம் ஏறல்செல்லாது,**

**நறுவிஅடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்**

**குறியா இன்பம், எளிதின், நின்மலைப்**

**பல்வேறு விலங்கும், எய்தும் நாட!**

**குறித்த இன்பம் நினக்கெவன் அரிய?**

**வெறுத்தஏஎர், வேய்புரைபனைத்தோள்,**

**நிறுப்பறில்லாநெஞ்சமொடுநின்மாட்டு**

**இவளும், இனையள்ஆயின், தந்தை**

**அருங்கடிக் காவலர் சோர்பதன்ஒற்றிக்**


**கங்குல் வருதலும்உரியை, பைம்புதல்**

**வேங்கையும்ஒள்ளினர்விரிந்தன;**

**நெடுவெண்திங்களும்ஊர்கொண்டன்றே!(அகநானூறுஉரை,NCBH,வெளியீடு, பாடல்எண்.2,பக்.5)**

தோழியின் கூற்றாக அமைந்த இப்பாடல் வெளிப்படுத்தும் கருத்தினை ஒவ்வொன்றாக விளக்கிக் குறிப்புப்பொருள்களைக் காணலாம். கடுவன் எனும்ஆண்குரங்கு மலையில் உள்ள முதிர்ந்த வாழைக் கனிகளையும், பலாவின் சுளைகளையும், சுனையில் உண்டான தேனையும் உண்டது. உண்டமயக்கத்தில் அச்சுனையின் அருகில் இருந்த மிளகுக் கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏறமாட்டாது, அதன் நிழலிடத்தே அமைந்த மணம் நாறும் மலர்ப்படுகையில் மகிழ்ந்து படுத்துறங்கியது என்பதாகக் கடுவனின் செயல்பாடுகள் பாடலில் இடம்பெற்றுள்ளன. பாடலில் ஓங்கி ஒலிக்கின்ற கடுவன் எனும் கருப்பொருள் (இயற்கைப்பொருள்) குறியீட்டுப்பொருளைத் தருகின்ற முறையைப் பின்வரும் படத்தின் மூலம் அறியலாம்.

படம்- 1




தோழியானவள் கடுவன் எனும் ஆண்குரங்கின் செயல்பாட்டினைக் கூறுவதன் மூலமாக, தோழியானவள் கடுவன் எனும் ஆண்குரங்கின் செயல்பாட்டினைக் கூறுவதன் மூலமாக, கடுவனின் தன்மை தலைவனுக்குப் பதிலீடு செய்யப்படுகிறது; கடுவன் தலைவனுக்கான குறியாக வந்து, குறியீட்டுப்பொருளைத் தருகின்றது. அதாவது கடுவனது செயல்பாடான தேறல் உண்ட மயக்கம், களவு வாழ்வை மட்டும் விரும்பி கற்பு வாழ்வைத் தொடங்க மனமில்லா திருத்தல் எனும் குறிப்புப் பொருளைத் தந்து, ஆழ்நிலையில் குரங்கின் செயல்தன்மை அடிப்படையில் தலைவனுக்கான குறியீடாக நிற்கிறது. இக்குறிப்புப் பொருளை (குறியீட்டை) கடுவன் எனும் இயற்கைப் பொருள் தாங்கி வந்து கவிதையில் குறிப்பானாக அமைந்துள்ளது.

பாடலில் கடுவனுக்கு அடுத்த நிலையில் பயின்று வருகின்ற வாழையானது, தலைவிக்கான பதிலீடாக (Substitute) அமைந்து, தலைவிக்கான குறியாக அமைகிறது.குலைதள்ளிய வாழையின் நிலைப்பாடு. தலைவிக்கான காதல் மிகுதியை வெளிப்படுத்துகின்ற காதல் பொருளாக அமைகின்றது. குலை தள்ளிய வாழை, கவிதையில் குறிப்பானாகச் செயல்பட்டு, தலைவிக்கான குறியாகவும் காதல் மிகுதி என்ற குறியீட்டுப்பொருளையும் தருவதைக் கீழ்வரும் படத்தின் வாயிலாக அறியலாம்.

படம் - 2

| | | |
|---|---|---|
| குறி<br>Sign<br>தலைவி | குறிப்பான்<br>Signifierd<br>வாழை | குறிப்பிடு<br>Signifier<br>தலைவியின்<br>காதல் மிகுதி |

மேற்கண்ட படங்களின் மூலம் கடுவன, வாழை ஆகிய இயற்கைப் பொருட்கள் தறியைமாக்கத்தின் வழியாக, விரைவாகத் தலைவியை மணம்முடித்துச் செல்க என்ற குறிப்புப் பொருளை மறைமுகமாக உணர்த்துகின்றன. பாடலில் பயின்று வரும் பிற இயற்கைப் பொருட்களான (கருப்பொருள்) வேங்கைமரம்பூத்தல், திங்களின் வளர்பிறை, திணை, அறுவடை போன்றன கற்பு வாழ்க்கை மேற்கொள்வதற்குக் காலங்களும் ஏற்றதாக உள்ளது என்ற குறிப்புப் பொருளை உணர்த்தும் குறியீடுகளாக அமைகின்றன. மேலும் இக்குறிகள் வெளிப்படுத்தம் குறிப்புப் பொருள்கள் ஆசிரியன் முன்னிறுத்துகின்ற முதன்மைக் குறிப்புப்பொருளான "களவு வாழ்க்கையை விடுத்து கற்பு வாழ்க்கையை மேற்கொள்க" என்பதற்கு வலு சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

- **குறியீட்டுக்குறியின்தனித்தன்மைகள்**

`மேற்கூறிய விளக்கங்கள் வழியாக உருவக்குறி, சுட்டுக்குறி, குறியீட்டுக்குறி இம்மூன்றில் "குறியீட்டுக்குறியானது ஏனைய குறிகளிலிருந்து பரிமாணம் கொண்டதாக உள்ளது. அதாவது உருவக்குறியானது ஒரு குறிப்பான், குறிப்பீட்டின் பௌதிகக் கூறினை மட்டும் பிரதிபலித்துக் காட்டுகிறது. சுட்டுக்குறியில் ஒரு குறிப்பான் ஒரேயொரு குறிப்பீட்டைப் பெறுவதற்கான வழியாகச் செயல்படுகிறது. ஆனால் குறியீட்டுக்குறியிலோ ஒரு குறிப்பான் ஒன்றுக்கும் மேற்பட்ட குறியீடுகளைத் தருவதாக உள்ளது. அதாவது குறியீட்டுக்குறியில் பொருண்மை அடுக்குகளாக உள்ளன. இப்பொருண்மை அடுக்கு செங்குத்துத் தளத்தில் ஆழ்ந்து செல்கிறது. இப்பொருண்மைகள் தம்முள் ஒன்றுக்கொன்று உறவுநிலைப் பட்டனவாக இருக்கலாம் அல்லது எவ்வித உறவும் இல்லாதனவாகவும் இருக்கலாம். மேலும் குறியீட்டுக் குறிமொழிசார் கலைகளிலும், மொழிசாராக் கலைகளிலும் பெருகக்காணக்கிடக்கிறது.

தத்துவப்பின் புலம் கொண்டபியர்ஸ், சமூகம் குறித்தொகுதிகளினால் ஆன அமைப்பு என்றும், அவற்றிலிருந்து அர்த்தங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் கண்டறிந்தார். குறியின் பிரதிநிதித்துவப் பண்பு குறித்தும் விளக்கியுள்ளார்,. மொழிகள்,

மொழிசார் பொருள் உருவாக்க வடிவங்கள் அனைத்திற்குமான ஒரு குறியியல் மாதிரியை உருவாக்கிய பியர்ஸ், குறிகளை அவற்றின் பொருண்மைப் புலப்பாட்டு அடிப்படையில் உருவக்குறி, சுட்டுக்குறி, குறியீட்டுக்குறி என மூன்று வகைகளாகப் பகுத்துக்காட்டினார். இதனூடாக இலக்கியத்தில் பொருண்மைப் புலப்பாட்டிற்கு, குறியீட்டுக் குறிபயன்படுத்திப் பார்க்கயியலும்.

**உசாத்துணை**


1. அப்துல் ரகுமான் , புதுக்கவிதையில் குறியீடு , அன்னம் வெளியீடு , சிவகங்கை. 1990.
2. இரவி.நம.வி.,குறியியலும் அரங்க்க் குறியியலும், கயல் பதிப்பகம், நெல்லியேந்தல் பட்டி. 1992.
3. இளம் பரிதி.மொ., குறியியல் ஒரு சங்கப்பார்வை, காவ்யா வெளியீடு, சென்னை. 2006.
4. செயபால்.இரா., (உரையாசிரியர்), அகநானூறு, NCBH, மூன்றாம் அச்சு, சென்னை, 2007.
5. தமிழவன்,தமிழும் குறியியலும்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை, 1992.
6. நுஃமான்.எம்.ஏ.,மொழியும் இக்க்கியம்,காலச்சுவடு பதிப்பகம்,நாகர்க்கொவில், 2006.
7. பிரேமானந்தன்.கோ.,சிலப்பதிகாரம் மணிமேகலை பெண்மையின் நாடகம்(குறியியல் ஆய்வு),முனைவர் பட்ட ஆய்வேடு,புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி,2022.
8. பூரணச்சந்திரன் .க,அமைப்பியலும் பின் அமைப்பியலும் ,அடையாளம், திருச்சி,2009.
9. முத்துச்சண்முகன், பிற்கால அமைப்பியலும் குறியியலும்,தமிழ்த்துறை ஆய்வு மையம்,தூய சாவேரியார் கல்லூரி, பாளைங்கோட்டை.1988.